# சதுப்பு நில காடுகளில் பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றம்



■ காரைக்காலில் உலக சுற்றுப்புற சூழல் தினத்தை முன்னிட்டு சதுப்புநில காடுகளில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் பணியில் தன்னார்வலர்கள் ஈடுபட்டனர்.

**காரைக்கால், ஜூன் 6–**

காரைக்காலில் உலக சுற்றுப்புற சூழல் தினத்தை முன்னிட்டு சதுப்புநில காடுகளில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் பணியில் தன்னார்வலர்கள் ஈடுபட்டனர்.

காரைக்கால் மாவட்டத்தில் உலக சுற்றுப்புற சூழல் தினத்தை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் மற்றும் புதுச்சேரி மாநில வனபாதுகாப்பு துறை சார்பில் மாவட்ட துணை ஆட்சியர் பாஸ்கரன் தலைமையில் கடற்கரையில் உள்ள அலையாத்தி காடுகளில் உள்ள பிளாஸ்டிக் பொருட்களை அகற்றும் பணி நேற்று நடைபெற்றது.

இதில் குடிமை பாது காப்பு படை வீரர்கள் மற்றும் ஆப்த்தமித்ரா தன்னார்வலர்கள் மற்றும் காமராஜர் பொறியியல் கல்லூரி மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டு சதுப்பு நில காடுகளில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றினர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை மாவட்ட நிர்வாகம் செய்திருந்தது.

தினமலர் dt: 06.06.2024